## சைதாப்பேட்டை, எழும்பூர், திருமங்கலம்

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் 3 நாட்கள் பொங்கல் விழா

சென்னை. ஜன. 8–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் சார்பில் மெட்ரோ பொங்கல் கலை விழா 10,11 மற்றும் 12 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

தஞ்சையில் உள்ள தென்னக பயன்பாட்டு மையத்துடன் இணைந்து தென்னிந்திய மாநிலங்களின் பல்வேறு கலைகள் மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் சைதாப்பேட்டை, எழும்பூர் மற்றும் திருமங்கலம் ஆகிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் நடைபெற உள்ளது.

முதல்நாள் நிகழ்வு

10–ந்தேதி சைதாப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையத்தில் மாலை 5.30 மணிக்கு தெலுங்கானாவைச் சேர்ந்த அந்தாசி நாராயணா குழுவினரின் ஆதிவாசிகள் தப்பாட்டம், கலைநிகழ்ச்சி.

மாலை 6.30 மணிக்கு திருவாருர் கலைச்சுடர்மணி கே.ஜெகன்நாதன் குழுவினரின் கரகம், காவடி, காளியாட்டம், கொக்கலி கட்டை உள்ளிட்ட பல்வேறு நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. இரவு 7.30 மணிக்கு தஞ்சை கலைச்சுடர்மணி டி.ஜி.ராஜு குழுவினரின் தப்பாட்டம் கலைநிகச்சி நடைபெறுகிறது.

எழும்பூர்

11–ந்தேதி எழும்பூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் தப்பாட்டம் கலைநிகழ்ச்சி மாலை 5.30 மணிக்கு நடைபெறுகிறது.

மாலை 6.30 மணிக்கு நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், இரவு 7.30 மணிக்கு தெருக்கூத்து கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மூன்றாம் நாள் நிகழ்வு

இதேபோன்று 12–ந்தேதி திருமங்கலம் மெட்ரோ ரெயில் நிலையத்தில் மாலை 5.30 மணிக்கு ஆதிவாசிகள் தப்பாட்டம் கலைநிகழ்ச்சியும் மாலை 6.30 மணிக்கு துரோணாச்சாரியார், நாட்டியகலா சூடாமணி விஜயம் கார்த்திக் குழுவினர் பரதநாட்டியம் பல்சுவை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இரவு 7.30 மணிக்கு திருவாரூர் கலைச்சுடர்மணி கே.ஜெகன்நாதன் குழுவினரின் நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மெட்ரோ பொங்கல் விழாவில் அனைவருக்கும் அனுமதி இலவசம்.